ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஆர்ய தர்மம்.

ஸர்வ பிராணிகளும் பிரயோஜனத்தை விரும்பாமல் ஒரு காரியத்திலும் பிரவிருத்திக்கிறதில்லை என்கிறபொதுவான நியாயத்தையனுஸரித்தே நாம் செய்யும் காரியங்களுக்கு நம்முடைய பிரபுவே நமக்குப் பலன் அளிக்கிறார் என்றுசிலரும், நம்முடைய பிரபுவை துவாரமாக வைத்துக்கொண்டு பரமேசுவரனே பயன் தருகிறார் என்று சிலரும், இந்த லோகத்திலேயே அடையக்கூடிய திருஷ்ட பலன்களுக்கு இந்த பிரபுக்கள் காரணம் பரலோகத்தில் பலன்களைத்தரும் வைதிக காரியங்களுக்குப் பரமேசுவரன் காரணம் என்ற சிலரும் ஸர்வகர்மங்களின் பலன்களுக்கு ஸர்வேசுவரனே தான் காரணம் என்று சிலரும், இவ்விதம் பலவாறாக பலஜனங்கள் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும், ஸர்வபலன்களையும் கொடுப்பவர் ஸர்வேசுவரனே அல்லது வேறுயாருமில்லை என்று ஸர்வ சாஸ்திர ஸித்தாந்தமறிந்த நம்முடையபெரியோர்கள் திருட நிச்சயமாகச் சொல்லுகிறார்கள் ஆனாலும் எந்த பிராணிகள் பலன்களை விரும்பியே கர்மாக்களைச் செய்கிறார்களோ, அந்தப்பிராணிகளால் முன் அனேக ஜன்மங்களில் செய்யப்பட்டிருக்கும் அவரவர்களது தர்மாதர்மஸ்வரூபமான புண்ணிய பாபகர்மங்களைக் கவனிக்காமலும் அவைகளையனுஸரிக்காமலும் பிராணிகளுக்குப் பலவித பலனை ஸ்வதந்திரமாகக்கொடுக்க ஸர்வசக்தியுள்ள ஸர்வேசுவரன் கூட ஸம்மதிக்கிறதில்லை என்பதான ஸர்வசாஸ்திர ஸித்தாந்தத்தை எவ்வித ஆக்ஷேபணையுமில்லாமல் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியதவசியமாகையால் நம்முடைய புண்ணிய பாபங்களையபேக்ஷித்தே யாரும் பலனைத்தருகிறார்கள் என்பதை மனதில் திருட நிச்சயமாகக்கொண்ட ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளிலும் காலையில் எழுந்திருந்ததுமுதல் மறுபடி தூங்கும்வரை நாம் இன்றையதினம் எந்த புண்ணிய கர்மங்களைச் செய்கிறது. எந்த பாபங்களை விலக்குகிறது—என்று நன்றாக ஆலோசித்து புண்ணியங்களையே விருத்திசெய்து அதனால் பரமேசுவரனை யாராதித்து நல்ல பலன்களையே அடைய முயற்சி செய்வோமாக. சுபம்

பத்திராதிபர்.

உ

ஆர்ய தர்மம்.

பிரமோத-௵ மார்கழி௴ ௧௭௨

வேதம்.

புத்தாகமம் முதலியவைபோல் எமது வேதமுமொருவரால் செய்யப்பட்டதன்று. புத்தாகமம் முதலிய கிரந்தங்களிலும் வியாஸர் வால்மீகி முதலிய மஹரிஷிகளாற் செய்யப்பட்டதாக வைதிகரொப்புக்கொள்ளும் மஹாபாரதம் ஸ்ரீராமாயணம் முதலிய இதிஹாஸ புராணாதிகளிலும் இது இன்னவராலியற்றப்பட்டது, இது இன்னவராலென்று முதலினும் நடுவிலும் முடிவிலும் வரையப்பட்டிருப்பதுபோல் எமது வேதத்தில் இது இன்னவராலியற்றப்பட்டதாகக் கூறியிருப்பதைக் காணோம். அதனாற்றான் ஸூத்திரகாரரான ஸ்ரீ வியாஸ பகவானும் தேவதாதிகரணத்தில் "இந்த காரணத்தாற்றான் (தேவர் முதலிய ஜகத்தினுத்பத்திக்குக் காரணமாயிருத்தலாற்றான்) வேதத்திற்கு யாம் கூறவேண்டியதாகக் கருதிய நித்தியத்தன்மை ஸித்தித்தது" எனமொழிந்தார். பாஷ்யக்காரவர்களும் இந்த ஸூத்திரத்தின் பாஷ்யத்தில் "வேதத்தை இயற்றிய ஸ்வதந்திரகர்த்தன் இன்னவன் என்று ஒரிடத்திலாவது வரையப்படாதபடியாலும் ஜகத்தினுத்பத்திக்குக் காரணமானதினாலும் பூர்வமீமாம்ஸையில் ஸ்தாபிக்கப்பட்ட வேதத்தின் நித்தியத்தன்மை உறுதிப்பட்டது" எனக் கூறினார்கள். அன்றியும் பாஷ்யக்காரரவர்கள் ப்ரம்ம ஸூத்திரம் முதலாவது அத்தியாயம் 2-வது பாதமிரண்டாவது ஸூத்திரத்தில் வேதம் அபௌருஷேயம் (ஒரு புருஷனாலுமியற்றப்படாதது) என்று கூறினார்கள். வேதம் ஈசுவரனாலியற்றப்பட்டதாக வேதத்திலே கூறப்படுகின்றது. சாந்தோக்கியமென்ற உபநிஷத்தில் "மூச்சுவிடுவது விளையாட்டுப்போலெங்ஙனம் பிரயாஸமற்றதோ அங்ஙனம் மஹா புருஷனான பரமேசுவரனுக்கு ரிக்வேதம் யஜுர்வேதம் ஸாம வேதம் அதர்வணவேதம் முதலிய சப்தராசியனைத்தும் மூச்சுவிடு

வதுபோலாம்" என்று கூறப்படுகின்றது. ஸூத்திரக்காரரும் சாஸ்திர யோநித்வாதிகரணத்தில் பரமேசுவரனுக்கு ஜகத்ஸிருஷ்டியாலமைந்த ஸர்வக்ஞத்துவத்தை திருடப்படுத்த வேதத்திற்கும் காரணம் பரமேசுவரனென்று மொழிந்தார். ஆகையால் வேத மொருவராலுமியற்றப்படாதது. நித்தியமாயுள்ளது. அபௌருஷேயமாயுள்ளது எனக்கூறுவது எங்ஙனம் பொருந்துமென ஆசங்கை செய்பவர்கட்கிது சமாதானமாம்—வேறொரு பிரமாணத்தால் ஒருபொருளைத் தெரிந்துகொண்டு அதைவெளியிட இயற்றப்பட்ட வாக்கியந்தான் புருஷனுலியற்றப்பட்ட பௌருஷேய வாக்கியமாகும். அதெப்படியென்றால் ஓராற்றங்கரையின் மீதுள்ள ஓர் மரத்தில் ஐந்து பழம் பழுத்திருப்பதை நேரில் பிரத்தியக்ஷமாகப் பார்த்துவிட்டு பிறகு அதை மற்றொருவனுக்கறிவிக்க வேண்டி 'ஆற்றங்கரை மரத்திலைந்து கனிகளிருக்கின்றன'வென்று வாக்கியத்தையுச்சரிக்கின்றான். அந்த வாக்கியந்தான் பௌருஷேயமாகும். இதுபோல் வேதமும் வேறு பிரமாணத்தால் விஷயங்களைத் தெரிந்துகொண்ட பரமேசுவரனுலியற்றப்பட்டதன்று. விஷயக்ஞானமொருகாலத்திலும் வேதோச்சாரணம் வேறுகாலத்திலுமென்றால் வேதவாக்கியத்திற்கு பௌருஷேயத் தன்மை வரும். அப்படியில்லை. ஆனாலோ ஈசுவரனெப்பொழுதும் ஸர்வக்ஞனாதல்பற்றி விஷயக்ஞானமும் வேதோச்சாரணமும் ஒரேகாலத்திலுண்டாவதால் பௌருஷேயவாக்யத்திற்குக் கூறியவிலக்கணம் வேதவாக்யங்களிலில்லை. இது ரத்தினப்பிரபை, பாமதி முதலிய வியாக்கியான கிரந்தங்களில் விரிவாய்க் காணலாம். ஆகையால் வேதம் பௌருஷேயமில்லையாகவே ஒருவராலியற்றப்பட்டதாக மாட்டாது. சாந்தோக்கியத்தில் கூறியிருப்பதற்கு என்ன கதியென்றால் கூறுவாம். சிஷ்யர்கட்கு வேதத்தைக் கற்பிக்கும் உபாத்தியாயர் முன்னுச்சரித்த ஸ்வரம் வரிசை முதலியவைகளை அனுஸரித்தே எங்ஙனம்மீண்டு உச்சரிக்கிறானோ, அங்ஙனமே பரமேசுவரனும் பூர்வகல்பங்களிலுச்சரித்ததை அனுஸரித்தே உச்சரித்தாரென்று சாந்தோக்கிய வாக்யத்திற்குக் கருத்தாம். முன்னுச்சரித்ததை அநுஸரிக்காமல் வேறு விதமாக உச்சரிக்கப்பட்ட வாக்யந்தான் பௌருஷேய வாக்கியமாகும். வேதாந்த பரிபாஷை முதலிய பிரமாண கிரந்தங்களிலும் விவரணமென்ற வியாக்கியானக் கிரந்தத்திலும் பௌருஷேய வாக்கியங்களுக்கு

"முன்னுச்சரித்ததை அபேக்ஷிக்காமலுச்சரிக்கப்படுவதே லக்ஷணம்" என்றும் அந்த லக்ஷணம் எமது வேதத்திலில்லாமையால், அபௌருஷேயமாமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இந்தக் கருத்து அந்த சாந்தோக்கிய வாக்கியத்தில் மூச்சுவிடுவதுபோலென்ற பதத்தால் வெளியாக்கப்பட்டது, இதன் விரிவு பஞ்சபாதிகையின் வியாக்கியானமாகிய விவரணமென்ற கிரந்தத்தில் சாஸ்திரயோநித்வாதிகரணத்தில் வெகுவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. மிகவும் நுட்பமான விஷயமானதாலும் மிக விரிவாகுமானதாலும் இங்கு விடுத்தனம், இவ்வாறாக வேதம் பௌருஷேயமன்று. அதனாலொருவராலுமியற்றப்பட்டதன்று. ஆகவே நித்தியமாமென்பது சித்தித்தது. இங்கு வேதம் நித்தியமென்றது பரமேசுவரன்போல் அழிவற்றது என்ற அபிப்பிராயத்தாலல்ல. ஆனால் ஆகாயம் முதலிய பூதங்கள்போல் பிரளயகால பரியந்தமிருக்கக்கூடியது. குடம், படம் முதலிய வஸ்துக்கள் போல அடிக்கடி நசிக்கக்கூடியதல்ல என்ற அபிப்பிராயத்தாலாம். இங்ஙனமாயின் வேதத்தில் பின்னுண்டாகின்றவர்களின் கதை கூறப்படுகின்றதே. பிராவாஹணரின்புத்திரர் பபார், உத்தாலகரின் புத்திரர் குஸுருபிந்தர், என்பது முதலிய வாக்கியங்களும் யாக்ஞவல்க்ய மஹரிஷிக்கு இரண்டு பாரியைகளிருந்தார்கள் என்பதாதி கதைகளும் எங்ஙனம் பொருந்தும். இந்த வாக்கியங்கள் பிரவாஹணருக்கு புத்திருண்டாவதற்குமுந்தியும் யாக்ஞவல்க்யர் விவாஹம் செய்துகொள்வதற்கு முந்தியும் இருக்க நியாயமில்லையல்லவா. ஆகவே வேதம் அநித்தியம் என்றேற்படுகிறது என்ற ஆக்ஷேபத்திற்கு இது சமாதானம்:—பிரவாஹணரின் புத்திரர் பபார் (बबर) என்று வேதவாக்யமில்லை. ஆனால் பிராவாஹிணிப்பபார் என்று இருக்கிறது. பிராவாஹணி என்ற பதத்திற்கு பிராவாஹணரின் புத்திரரென்று பொருள்கொண்டது தவறு, பிராவாஹணி प्रावाहणि என்ற பதத்தில் (प्र) என்ற உபஸர்க்கத்திற்கு நன்றாக என்பது பொருள் அதற்குமேல் (वह) என்பதற்கு போகுதல் என்று பொருள். அதற்கு மேலிருக்கிற (इ) என்ற பிரத்தியத்திற்கு கர்த்தாவென்பது பொருள், ஆகவே प्रावाहणि என்ற பதத்திற்கு நன்றாய்ப் போகிறவன் என்றும் (बबर) என்பதற்கு பர்பர் என்ற சப்தமுள்ளவன் என்றும் பொருள் ஆகிறது, ஆகையால் பர்பர் என்ற சப்தத்தோடு நன்றாய்

ஓடுகிறவன் வாயுஎன்று பொருளாம். வாயுவோ நித்தியனாதலால் அவனைச் சொல்லுகிற வாக்யமும் நித்தியந்தான். இதுபோலவே இதுபோன்ற வாக்கியங்களுக்கு ஆங்காங்கு பொருள் கூறப்பட்டிருப்பதைக் கண்டுகொள்க. இங்ஙனம் இந்த வாக்கியங்களுக்குப் பொருள் பூர்வமீமாம்ஸை 1-வது அத்தியாயம் முதலாவதுபாதம் 31-வது ஸூத்திரத்தின் பாஷ்யத்தில் சபரஸ்வாமிகளால் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும் இந்தமாதிரி ஆசங்கை செய்வதே சரியன்று. ஏனெனில் வேதத்தில் நெல்லினாலாவது யவதான்யத்தாலாவது ஹோமம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இதில் நெல்லென்றும் யவமென்றுமிருப்பதால் நமது கழனியில் அறுவடையான நெல்லுக்குப் பிறகுதான் இந்த வாக்கியமெழுதப்பட்டதென்று எவரேனும் கூறுவாரோ. இதுபோலவே வெகு இடங்களில் சமாதானம் செய்துகொள்ளவேண்டும். யாக்ஞவல்க்யர் முதலாயினோர் கதை கூறியிருப்பதற்கு வழியென்னவெனில்—கூறுவாம். இந்த கதைகளெல்லாம் அர்த்ரிவாதமெனப்படும். இதற்கு தோன்றக்கூடிய பொருளைத் தெரிவிப்பதில் தாத்பரியமில்லை. வெரு ஸூக்ஷ்மமான பொருளைத்தெரிவிப்பதற்காக பிரவிருத்தித்தவேதமானது உலகத்தாரின் புத்தியை அனுஸரித்து ஒரு கதையைச் சொல்வதுபோல் சொல்லிக்காட்டி அந்த நுட்பமான விஷயத்தை புத்தியில்புகட்டுவதிற்றான் தாத்பரியம். மாணுக்கருக்கு ஓர் கணக்கைப்போடக்கருதிய உபாத்தியாயர் A என்று ஒருவனிருந்தான், B என்று ஒருவனிருந்தான் என்று ஓர் கதையைச் சொல்ல ஆரம்பித்து கணக்கைப் பின்னுறைக்கின்றார். அங்கு உபாத்தியாயருக்கு அந்த கதையில் தாத்பரியமில்லை. ஆனால் கணக்கை மாணுக்கன் மனதில் புகட்டுவதிற்றான் கருத்து. இதுபோற்றான் வேதத்திலும் கதைகளை கண்டுகொள்க. இந்த அபிப்ராயம் ப்ரம்மஸூத்திரத்தில் 3-வது அத்தியாயம் 4-வது பாதம் 4-வது அதிகாணத்தில் ஸ்பஷ்டமாய் விளங்கும். இதனால் "பசுக்கள் ஆசைபட்டன" என்பதாதி கதைகளுக்கும் சமாதானம் கூறப்பட்டதாயிற்று. பசுக்களே நல்ல காரியம்செய்து இஷ்டமான பயனை அடைந்ததென்றால் அறிவுமதற்குள்ள கருவிகளனைத்தும் பொருந்திய வேதாதிகாரம்பெற்ற மனிதர்கள் விதிக்கப்பட்ட நல்ல கர்மங்களைச்செய்தால் பயனடைவார்களென்பதற்குக் கேட்பானேனென்று மனிதரை நல்ல காரியத்தில் பிரவேசிக்கும்படி செய்யக்கருதிய வேதம் இவ்வாறு கூறுவது

விரோதமன்று. இந்தக் கருத்து சாபரபாஷ்யத்தில் 1-வது அத்தியாயம் முதல் பதம் 32-வது ஸூத்திரத்தில் ஸ்பஷ்டமாகும். இதனால் வேதம் தாறுமாறாகப் பித்தனைப்போல் பிதற்றுகின்றது என்ற ஆசங்கைக்குப் பரிஹாரமாயிற்று. உலக வியவகாரத்திலும் ஸந்தியா காலத்தில் மிருகங்களும் ஸஞ்சரிப்ப தில்லையென்றால் அறிஞரான அந்தணருக்குக் கேட்பானேன். ஏகாதசியில் பசுவுக்குப் புல் கொடுக்கக் கூடாதென்றால் அந்தணரைத் தப் புண்ணிய காலத்திலுபவாஸமிருக்கவேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ என்று சொல்பவர் பண்டிதராகக் கொண்டாடப் படுகின்றாரேயன்றி பித்தனென்று பழிக்கப்படுகிறாரில்லை. இதுபோற்றான்வேதமும், காடகம், காபாலகம், என்றுபெயர் வந்திருக்கிறதே கேடரியற்றியது கபிலர் இயற்றியதென்றல்லவா அதன்பொருள். அங்ஙனமாயின் வேதமெப்படி நித்தியமாகுமென்றால் கூறுவாம். காடகம் என்றால்கடராலியற்றப்பட்டதென்று பொருளல்ல. அநேகம் சிஷர்கட்குகடரால்சொல்லிவைக்கப்பட்டது என்று பொருள். அதனால்காடகம் என்று பெயர்வந்ததாம். இங்ஙனம்காபாலகம்என்பதாதிகளுக்கும் பொருள் காண்க. ஆகையால்வேதம் அநாநிசித்தமாயுள்ளதே. "ஆதல்பற்றி புத்தாகமம் முதலியதுபோல் புருஷதோஷத்தால் தோஷப்பட்டதில்லை. பயனுள்ளதைத்தான்போதிக்கின்றது. ஆகையால் வேதம் பிரமாணமாகும். புத்தாகமம் முதலிவற்றுக்கும் வைதிகர்கூறிய அபௌருஷேயத் தன்மையுளதாதலின் அவையும் பிரமாணமாகாதோவென்றால்ஆகாது. ஏனென்றால் பௌத்தர்கள் அங்ஙனமங்கீகரிக்கவில்லை. புத்ததேவன் புத்திபூர்வகமாயியற்றினாரென்றல்லவா அவர்கள் கூறுகின்றனர். இதனால் புத்ததேவருக்கு புத்தாகமத்தை யியற்றுவதற்குறிய புத்தியுண்டான காலத்திற்குப் பின்னர் அவ்வாகமமியற்றப்பட்டதாக ஏற்படுகின்றது. ஆகையால் வைதிகர் ஒப்புக் கொள்ளும் அபௌருஷேயத்தன்மை புத்தாகமம் முதலியவற்றிலில்லை. பிடிவாதத்தாலிருப்பதாகக் கூறுகின்றவர்களைக்கேட்பாம். புத்தாகமம் அபௌருஷேயத் தன்மையுள்ள பிரமாணமாயின் ஜைநாகமமேன் அங்ஙனமாகாது. கபிலர் கணாதர் முதலியவர்களியற்றிய ஆகமங்களுமேன் பிரமாணமாகா. அவைகளெல்லாம் பிரமாணந்தானென்றால் அது பொருந்தாது. பிரமாணமாகிய அவைகள் ஒரே வஸ்துவைப்பற்றி வெவ்வேறு விதமாகக் கூறுவது நியாயமாகுமா. ஜகத்திற்குக் காரணமான வஸ்துவில் இவ்வாகமங்களெல்லாம்

ஒன்றற்கொன்று விபரீதமாகவே கருத்துடையவைகளாயிருக்கின்றன. கடம் படம்முதலிய காரியவஸ்துக்கள் முன்னில்லாமலிருந்து பிறகு உண்டாவதாக தார்க்கிகர் கூறுகின்னர். ஸாங்கியமதஸ்தர்களோ முன்னிருந்தவைகள் தானுண்டாகின்றதாகக் கூறுகின்றனர்.

இங்ஙனம் ஒருவருக்கொருவர் ஒரே வஸ்துவைப்பற்றி வெவ்வேறு விதமாக அபிப்பிராயப்பட்டு அதற்கிணங்க பரஸ்பரம் விரோதமுள்ள ஆகமங்களை யியற்றினர்களென்றால் அதை சிரேயஸ்ஸை விரும்பியவர்கள் எவ்விதம் நம்பிக் கரையேறுவது. ஸர்வக்ஞனுகிய பரமேசுவரனியற்றிய வேதம்போல் ஸர்வக்ஞர்களான கபிலர் முதலியவர்களியற்றிய ஆகமங்களும் பிரமாணந்தான். கபிலர் முதலாயினோர் ஸித்தபுருஷராதல்பற்றி ஸர்வக்ஞராவார்கள். கபிலருடைய ஞானதிசயம் வேதத்தாலேயே கொண்டாடப்படுகின்றது. ஆகையால அவர்களியற்றியது எங்ஙனம் அப்பிரமாணமாகும். ஆகையாலவைகளும் பிரமாணங்கள் தான் என்று சிலர் ஆக்ஷேபிப்பார்களானல் அவர்களை நோக்கியிது கூறுவாம். ஸர்வக்ஞர்களாயுள்ள அவர்கள் விருத்தமான பொருளைக் கூறுவார்களா. கூறியிருப்பதாலேயே அவர்கள் ஸர்வக்ஞரல்லவென்றேற்படுகின்றது. ஸித்தபுருஷரென்றால் அதற்கிது கூறுவாம். அவர்கள் அனுதியாகவே ஸித்தர்களா அல்லது ஒரு காலவிஷேசத்தில் ஸித்தியடைந்தார்களா. அனுதிஸித்தர்களென்பது பொருந்தாது. அவர்கள் ஸித்தியடைவதற்காக அனேகம் ஸாதனங்களை யனுஷ்டித்ததாகக் கூறும் வாக்கியங்களுக்கு விரோதமாகும். ஆகையால் ஒரு காலவிசேஷத்திற்றான் ஸித்தியடைந்ததாகக்கொள்ளவேண்டும். அங்ஙனமாயின் எதனுல் ஸித்தியடைந்தார்களென்று ஆலோசிக்குமிடத்து வேதத்திற் கூறிய கன்மயோகம் உபாஸயோகமென்ற பக்தியோகம் முதலிய ஸாதனங்களை நீடூழிகாலமனுஷ்டித்து அதனுல் அகமகிழ்ந்து வரங்கொடுக்க வந்த பரமேசுவரனுடைய அனுக்கிரஹத்தால் ஸித்திபெற்றதாகக் கூறவேண்டும். இங்ஙனம் பரமேசுவரனுடைய தயவினுல் ஸித்தியடைந்தவர்கள் அப்பரமனது ஆக்ஞாரூபமான வேதத்திற்கு விரோதமாகக் கூறவே மாட்டார்கள். வேதத்திலேயே கபிலருடைய ஞானதிசயம் கொண்டாடப்பட்டதென்றால் அதற்

கென்ன விரோதம். வேதத்தால் கொண்டாடப்பட்ட கபிலர் வேதவிருத்தமான் ஸாங்கியமதத்தைப் பிரவிருத்திசெய்வித்த கபிலரல்ல. ஸகரமஹாராஜனுடைய புத்திரர்களை யெரித்த கபிலவாஸுதேவரென்ற கபிலரையல்லவா வேதம் கொண்டாடுகிறது. ஆகையால் வேதவிருத்தமான கபிலர் முதலியவரியற்றிய ஆகமம் பிரமாணமாகவேமாட்டாது. இங்ஙனம் ஆஸ்திகரென்று பிரஸித்திபெற்றவரும், வேதத்தையும் பிரமாணமாக நம்பியவரும் வைதிக ஸித்தாந்தத்திற்கு நெருங்கியதும் சிஷ்டாங்கீகரிக்கத்தக்கதுமான அனேக ஸித்தாந்தங்களை போதித்தவரும் ஆகிய கபிலருடைய மதமே வேதவிருத்தமாயிருத்தல்பற்றி தள்ளப்பட்டது. அப்படியிருக்கநாஸ்திகரென்று பிரஸித்திபெற்று வேதத்தையே நம்பாத புத்தர்முதலாயினோர்களின் ஆகமத்தைத் தள்ளவேண்டியதில் சந்தேகமுண்டோ ஆதல்பற்றிவேதவிருத்தமாயிருப்பதாலும் முன்னுக்குப்பின் பலவித விரோதமிருப்பதாலும் புத்தாதி மதம் பிரமாணமாகாது. வேதத்திலும் முன்னுக்குப்பின் விரோதம் பலவாறுயிருக்கின்றதே. ஜகத்காரண வஸ்துவை வேதமு மொருவிதமாய்க் கூறவில்லையேயென்றால் கூறுவாம். வேதத்தில் பூர்வாபர விருத்தமாயிருப்பதாக நினைப்பது பூர்வ மீமாம்ஸை உத்தரமீமாம்ஸைகளை விசாரிக்காத தோஷம். அவைகளை நன்றாய் விசாரித்துவிட்டால் விரோதம் தோன்றாது. உத்தரமீமாம்ஸையில் இரண்டாவது அத்தியாயத்தில் இதர மதஸ்தர்கள் வைதிகமதத்தில் செய்யுமாக்ஷேபத்திற்கும் பூர்வாபர விரோதமிருப்பதாகத் தோன்றுவதற்கும் பரிஹாரம் விரிவாய் ஸூத்திரகாரர்களாலும் பாஷ்யக்காரர்களாலும் கூறப்பட்டது ஆகையால் வேதத்தில் எவ்வித ஆக்ஷேபங்களும் செய்ய இடமில்லை. ஆதல்பற்றி வேதமானது எல்லா பிரமாணங்களைக்காட்டிலும் சிறந்த பிரமாணம் என்றது சித்தமாயிற்று. ஆகையால் சாசுவத சிரேயஸ்ஸை விரும்பியவர்கள் வேதத்திற் கூறியவாறு நடந்து சிரேயஸ்ஸையடைவார்கள் என்று ஈசனது பொற்பாத கமலத்தை பிரார்த்தித்து இந்த பிரஸங்கத்தை முடிப்போம்.

சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீமீனாக்ஷி பரிணயம்.

ஈசானவிஜயம் என்ற ஐந்தாவது தரங்கம்.

பிறகு புன்சிரிப்புக்கொண்ட சிவபெருமான் அவரைப்பார்த்துக்கூறியதாவது— அவள் நமது காதல்பட்டவளே; தவறுமல் இவளோடு சண்டையிட்டு க்ஷேமத்துடன் என்னிடம் மறுப்டியும் வருவாயாக என்று காமதஹனனுடைய அம்மொழியையும் அப்புஞ்சிரிப்பையும் சிறிதேனும் சிந்தியாமல், போராவேசங்கொண்ட அந்நந்திதேவர் ஏழுகோடி சேனைத் தலைவர்களுடன் வெளிக்கிளம்பினர்.

அவர்களில் ஏழுகண்கள் படைத்தவர்களும், மூன்றுமூக்குள்ளவர்களும், ஆறு முகமுள்ளவர்களும், இரண்டு வயறுள்ளவர்களும், பத்துக் கால்கள் படைத்தவர்களும், அறுபது எழுபது கைகளுள்ளவர்களும், ஜ்வலிக்கும் கவசமுள்ளவர்களும், தலைமயிரில்லாதவர்களும், குடுமியுள்ளவர்களும், சடையுள்ளவர்களும், கை கால்களில்லாதவர்களும், தலையற்றவர்களும், வயிற்றில் முகமுள்ளவர்களும், தலைப்பக்கத்தில் காலுள்ளவர்களும், தணல்கள் போன்ற கண்ணுள்ளவர்களும், விஷத்தைக் கக்குகிறவர்களும், நாக்கும் உதடும் தொங்கினவர்களும், வெண்மை மஞ்சள் பச்சை கருப்பு நிறமுள்ளவர்களும், கொம்புள்ளவர்களும், இரக்கையுள்ளவர்களும், பக்ஷிமூக்குள்ளவர்வளும், புலி, யானை, குதிரை, காகம் இவைகளின் காலுள்ளவர்களும், மரங்கள், மலைகள், கற்கள், நகங்கள் இவைகளை ஆயுதமாகக் கொண்டவர்களும், காடி, வானரம், சிறுத்தை, பாம்பு, புலி, சிங்கம், யாளி, யானை இவைகளின் முகமுள்ளவர்களும், ஒரே காலத்தில் அட்டஹாஸமிடுகிறவர்களும், மதங்கொண்டவர்களுமான கணங்கள் கூட்டம் கூட்டமாக யுத்தத்தில் வெளிக்கிளம்பினர்.

அவ்விதமான அந்த மானிட ஸைன்யமும், குதிரைகள் ஓடவும், யானைகள் மாண்டுபோகவும், யுத்தவீரர்கள் நட்டமாகவும், கணநேரத்தில் கலந்தது. மந்திரியும் மயங்கினன். அந்த பிரமத கணங்கள், தொடைகளின் வேகத்தால் காலாட்படையையும் வாய்க் காற்றால் யானைகளின் கூட்டத்தையும், உள்ளங்கைக் காற்றால் தேர்களையும், தூரத்தில் எறிந்தார்கள். பெருங்காற்று சிறிய தீபத்தைப் போலவும் காட்டுத் தீ காய்ந்த புதரைப்போலு

வும், சூரியோதயம் இருள்கூட்டத்தைப் போலவும், அச்சைன்யம் மானிட சைன்யத்தை நாசம் பண்ணிற்று. நந்திதேவரும் கணங்களோடுகூட அச்சேனையை விரட்டிக்கொண்டு, பாபாப்புடன் இருந்தபோது, வில்லையெடுத்து முகமலர்ந்து தோழிஜனம் முன்னால் சென்றது.

கச்சைக்கட்டிக் கொண்டதும், இறுக்கிக் கட்டப்பட்ட ரவிக்கைகளையுடையதும் புருவம் நெரிக்கின்றதும், அழகிய முகமுள்ளதும், மோஹத்தையும் பயத்தையுந்தருவதுமான அச்சைன்யம், உருவங்கொண்டு விளங்குகிற சிருங்கார வீரரஸங்கள்போல் காணப்பட்டன. தங்களுக்குரிய எதிர்சைன்யம் நேராததாலே போரில் ஆவல் குறைந்தவளும் தோழிமார்களின் முயற்சியைப் பார்த்தவளுமான அம்மீனாக்ஷி, மெதுவாக நாணேற்றினவில்லை எடுத்துக்கொண்டாள். அங்கு அம்பாளின் சேனையின் வில்களிலிருந்து நழுவினவைகளும், தங்கப்பிடியால் சோபிக்கிறவைகளுமான அம்புகள் பிரமதககூட்டத்தில் எங்கும் விழுந்தன. முன்னாலேயே விகாரமுள்ளதும் தனது அம்புகளால் போரில் அதிக விகாரத்தையடைவிக்கப்பட்டதுமான அச்சேனையைப் பார்த்துப் பார்த்து, ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு, அவர்கள் விளையாட்டாய்ப் போர்செய்தனர். போரில் அவர்களின் அம்புகளால் அடிக்கப்பட்ட கணநாயகர்கள் சூலாயுதத்தை நழுவவிட்டும் தோமரம் முறியப்பட்டும் முத்காம் அழிந்தும், வில்லறுபட்டும் நந்திதேவரை சரணம்புகுந்தனர். ஓடுகின்ற கணத்தலைவர்களைத் தடுத்தும், அவளது தோழிமார்களைப் போரில் பயமுறுத்திக்கொண்டும், இரண்டாவது சங்கர்போன்ற அந்த நந்திதேவர் தேரில் விளங்கும் அந்த மீனாக்ஷியை முன்னாலே கண்டார். தோழிமார் காளி அவரை, தயவில்லாமல் அடித்தனர். அம்பாள் மெதுமெதுவாகவே அடித்தனள், “அம்பாளின் கையிலிருந்து நழுவின பாணங்கள் யாருடைய உயிர்நிலையில்தான் நுழைய முடியும்.” அச்சிலாத குமாரர் போரிலிருந்து திரும்பி “சிவபெருமானே தாங்கள் அப்பெண்ணோடு சமாதானஞ்செய்து கொள்வதே உசிதமானது வாரும் போவோம்” என்று அறிவித்தார் என்று சொல்கின்ற அந்தநந்திதேவரைப் பிடித்துக்கொண்டு அச்சிவபெருமான் புஞ்சிரிப்புசெய்துகொண்டு வெளிக்கிளம்பினார். பிறகு விடபக்கொடியோனான சிவபெருமானைக் கண்ணுற்றதும் பாண்டியகுமாரியின் இடதுகை போர்செய்வதற்குத்துடித்

த்து. சங்கரனின் வலதுகைதானே துடித்தது, அத்தடாதகா தேவி, உருவமெடுத்த சிருங்கார ரஸம்போலவும்,உக்கிர ஸ்வபாவத்தை விட்டசூரியன் போலவும், விடப வாகனத்தில் வீற்றினவரும் சரத்கால சந்திரன்போல் சுந்தரனும் நந்திதேவரோடு கூடினவருமான புராரிபுவைக்கண்டாள். அப்போது அம்பாளின் கையிலிருந்து அம்போடுகூடினவில் நழுவிற்று. அவரைத் தழுவிக்கொள்ள மனது பரபரத்தது. மயிர்க்கூச்சல் உண்டாயிற்று. மார்பில் இருந்த மூன்றாவது குசம் மறைந்தது. இப்பெண் எப்படி போர் புரிகிறுள்? இச்சிவபெருமான் எப்படி சண்டையிடுகிறுர்? என்று மூவுலகும் பார்க்கவிரும்பும்போது, புஷ்பபாணன், அவ்விருவரையும் அம்புக்கூட்டங்களுக்குக் குறியாகவைத்தான். குற்றமற்ற அம்பாகிய யாதொரு அம்பாலேயே முன்னறிந்து வீண்சிரமமடைந்த மன்மதன் முன் ஜயிக்கப்பட்டானே. அந்த அம்பாளாலேயே இப்போது பெருங்கீர்த்தியை அவன் பெற்றுன். "காலந்தான் ஜயத்திற்குக்காரணம்" போரில் அவளால் பயமுறுத்தப்பட்ட பிரதமகணங்கள் அசையாது நின்றனர், மோஹமடைந்தனர். நடுங்கினர். அதே அவஸ்தையுடனே அவ்விடத்திலும் பரிணமித்தது. "சைவஜனங்களுக்குச் செய்யும் அபகாரம் எவருக்கும் ஜீர்ணமாகிறதில்லையல்லவோ? முன்னுல் சிவபிரானைக்கண்டு மன்மதனின் வேவுகாரன்போன்ற மூன்றுவது குசம் எப்போது உள் நுழைந்ததோ? அப்போதே ஸுமதியால் அறிவிக்கப்பட்ட சந்திரமௌளி அவளுடைய சமீபமடைந்தார். அப்போது அவர்களுடைய தலையில் ஓர் புஷ்பமாரி காணப்பட்டது.

பிரமதநாதன் வணங்கின அவளுடைய முகத்தைக் கையால் நிமிர்த்தி இவ்விதம் சொன்னுர்—"தேவியே; பார். என் நீ வெட்கப்படுகிறுய். நாங்கள் உன்னுல் வெல்லப்பட்டோம் கருத்து, அறியப்பட்டது. அப்படியாயினும் உன்னைக் குறித்து காஞ்சனமாவிகையிடம் கேட்கிறேன்" என்று

என்று புன்சிரிப்புக்கொண்டு சம்புசொல்லும்போது, "அப்படியே செய்யப்படட்டும்" உடனே அப்பெண், அழகான பதில் மொழியைச்சாதுர்யமாகச்சொன்னுள். பரமசிவன்அவளதுசாதுர்யத்தைக்கண்டு சிறுமியே; அவ்வாறே செய்கிறேன். நீ உடனே திரும்பலாம். வருகிற திங்கட்கிழமையிலேயே மதுரைவந்துசேர்கிறேன். ஸந்தத்தமுள்ளவளாயிரு-என்று அவளிடத்தில் சொல்லி மறைந்தார்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரி.

செய்நன்றி மறவாமை

(அல்லது குருபக்தி.)

"என்னன்றி கொன்றார்க்கு முய்வுண்டாகுமுய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்று பொய்யாமொழிப்புலவர்மொழிந்துள்ளார்) இதன் முதல்படியைச்சற்று ஆராய்வோம். இங்கு நன்றி என்ற சொல்லானது चोदनालक्षणोऽर्थो धर्मः என்று ஜைமினிமுனிவரால் ஸூசிக்கப்பட்டு

वेदबोधितालौकिकश्रेयस्साधनताको धर्मः

என்று வியாக்யான கர்த்தர்களால் பரிஷ்கரிக்கப்பட்டு எந்த தர்மமானது நித்ய நைமித்திக ரூபமாக

अकुर्वन् विहितं कर्म निंदितं च समाचरन् ।
प्रसजंश्चेंद्रियार्थेषु नरः पतनमृच्छति ॥

என்று அனுஷ்டிக்கப்படாமல் கைவிடப்படுமானால் (கொல்லப்படுமானால்(பாதித்தியத்துக்கு ஹேதுவோ அது-நான் என்றமையால் மனிதர் யாவரும் தத்தம் வர்ணாசிரம தர்மத்தை கை நழுவவிடுதல் கூடாததாகும். அப்படி நிந்திக்கப்பட்ட கர்மபரித்தியாகம் செய்பவனையும் பிரும்மஹத்தி முதலான தோஷங்களினால் சிரேயஸ் பிரதிபந்திக்கப்படுவதால் அதைச் செய்பவரையும் நன்றிகொன்றாரென்று கொள்ளவேண்டும். இவ்வாறு நித்திய கர்மங்களை விட்டவனும் நிஷித்தகர்மங்களைஸேவிப்பவனும் கூடச்ருதிஸ்மிருதி விஹிதமான அச்வமேதம் ஸேதுஸ்நானம் முதலானவைகளை அனுஷ்டித்து புனிதனாக்கக்கூடும்.

तरति ब्रह्महत्यां योऽश्वमेधेन यजते என்றும்,
सेतुं दृष्ट्वा समुद्रस्य ब्रह्महत्यां व्यपोहति

என்றும் வசனங்களால் உய்வு உண்டென உணரற்பாலது. செய்நன்றிகொன்ற மகர்க்கோ ஒரு விதத்திலும் உய்வில்லை. இம்மையிலும் பலர் நிந்திப்பார்கள். மறுமையிலும் மஹாநரகங்களில் அழுந்தி வருந்துவாள். कृतघ्ने नास्ति निष्कृतिः என்று ஸம்ருதிகள் யர்வற்றிலும் ப்ராயச்சித்தம் இல்லையென்று விலக்கியிருப்பதால் என்று விதந்து கூறியிருக்கும் இத்திருக்குறளை சிந்திக்குமிடத்து மஹாபாரதம் சாந்தி பர்வம் 173-வது அத்தியாயத்திலுள்ள

ब्रह्मघ्ने च सुरापे च चोरे भग्नव्रते तथा निष्कृतिर्विहिता राजन्
कृतघ्ने नास्ति निष्कृतिः ॥

என்ற 25வது ச்லோகமும் அதைப்பற்றின கதையும் ஞாபகத்திற்கு வருவதால் அதைச்சிறிது விரித்து உரைத்துவிட்டுப் பிறகுப்ரக்ருதவிஷயத்தில் ப்ரவேசிப்போம்—மத்ய தேசத்தில் ஒரூரில் கௌதமகோத்திரத்தில் ஜனித்த ஒரு ப்ராம்மணன் இருந்தான். அவன் வேதாத்யயனம் முதலான ஸகல தர்மானுஷ்டானங்களை நழுவவிட்டு ஜீவனத்திற்குவேண்டி மிலேச்ச தேசத்திற்குச் சென்றான். அத்தேசத்திலுள்ள ஒரு வேடன் இவனைக்கண்டு இவனிடமுள்ள இரக்கத்தினால் ப்ராம்மணனுக்கு வேண்டிய உணவுப் பொருளைக்கொடுத்து உதவிபுரிந்து கடைசியில் தன்மகளையும் அவனுக்கு மணமுடித்து வைத்தான். அந்தகௌதமனோ அங்குள்ள கூட்டத்தாருடன்சேர்ந்து தினந்தோறும் வில்லும்கையுமாகக்காட்டிற்குச் செல்வதும் அநேகம் புறா குருவி முதலிய பட்சிகளையடித்துக்கொன்று தின்பதுமாக இருந்துவந்தான். கொஞ்சகாலம் கழிந்ததும் அதிகமான தனம் சேர்க்கவேண்டுமென்ற ஆசை அதிகரித்தது. பல வியாபாரிகள் வியாபாரத்திற்காகஸமுத்திரத்திற்குச் சென்றார்கள் அவர்களுடன் அவனும் கடலைநோக்கிப் போகையில் வழியில் ஒரு காட்டானைத் தாக்கக் கூட்டத்திலுள்ளோர் கலைந்துவிட்டார்கள். கதியற்ற கௌதமன் வழிதெரியாமல் தப்பியோடி காட்டுமார்க்கமாய் வெகுதூரம்சென்று கல்லு முள்ளுகளால் கிழிக்கப்பட்டுப் பசியினால் வருந்தி உடம்பு மெலிந்து மனம் சோர்ந்து தள்ளாடும் சமயத்தில் வெகுதூரத்தில் ஒரு ஆலமரத்தைக்கண்டாள். அதைக் கண்டமாத்திரத்தில் தனக்குவியலைக்கண்ட தரித்திரன்போல் ஸந்தோஷத்துடன் அதன் நிழலையடைந்தான் அம்மரம் ஒருமைல் சுற்றளவு படர்ந்து, "தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதைதெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையிலும் நுண்ணியதேயாயினும் அண்ணல்யானை அணிதேர் புரவியாம் பெரும்படையொடு மன்னருக்கிருக்க நிழலாகும்மே" என்ற ஔவையின் வாக்கியத்திற்கிணங்க விரிந்திருந்ததுமன்றி அதன் கீழே சந்தனம் பன்னீர் தெளிக்கப்பட்டிருந்தது. புஷ்பங்களைப் பரத்திப் படுக்கைகள் விரிக்கப்பட்டிருந்தன. கௌதமன் அதைச் சார்ந்ததும் அயர்ந்துதூங்கிவிட்டான். அம்மரத்தில்மேலிருந்த ஒரு கொக்கானது இவன் பசியுடன் இருப்பதையறிந்து

आशा प्रतिक्षे सङ्गतंसूनृतां च इष्टापूर्ते पुत्रापशूंश्च सर्वान् ।
एतद्वृङ्क्ते पुरुषस्याल्पमेधसोयस्यानश्नन्वसतिब्राह्मणो गृहे ॥

என்று எந்தக்ருஹஸ்தனுடைய இருப்பிடத்தில் அதிதியான ப்ரா
மணன் உண்ணாமல் தங்குவானோ அந்த க்ருஹஸ்தனுடைய பூர்வ
புண்யங்கள் மக்கள் மாடுகள் முதலியயாவும் நசிக்கும்' அவன்
மிகுந்ததுர்புத்தியுள்ளவன் என்றுசிந்தித்திருப்பதையும் சிந்தித்தது
இவனுக்கு உணவளிக்கவேண்டி அவனிடம் உட்கார்ந்து
கொண்டு சிறகால் மெல்ல விசிரியது.

பிறகு களைதீர்ந்து எழுந்த கௌதமனைப்பார்த்து ஓ
அதிதியே ! இதோ பலவித பட்சிமாம்ஸங்கள் வைத்திருக்கிறேன்.
இதோ நெருப்புமிருக்கிறது. இதை வாட்டித்தின்று பசிதீர்த்துக்
கொள்ளும் என்று தன்மூக்கினால் கொண்டுவந்த நெருப்புத்துண்
டத்தையும் கொடுத்தது. அவனும் அவ்வாறே உண்டு பசிதீர்த்துக்
கொண்டான் பின்பு இருவரும் நெடுநேரம் சம்பாஷித்துக் கொண்
டார்கள். கௌதமன் தன்வரலாற்றை ஆதியோடந்தமாக ஸவிஸ்
தாரம் சொல்லிவிட்டான். பின்பு கொக்கானது? நான் தேவலோ
கத்திலுள்ளகொக்கு. காச்யபரின் புதல்வன். நாடீஜங்கன் என்று
பெயர்? உனக்குப்பணம் சம்பாதிக்க விருப்பமிருந்தால் நீ கவலைப்
படவேண்டாம் உன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து வைக்கிறேன்
என்றுசொல்லி சற்றுதூரத்திலுள்ள தன் நண்பனைக் குறிப்பிட்டு
அவனுடைய குணாதிசயங்களை எடுத்துறைத்து அவனுக்கு ள்ளப்
ராம்மண பக்தியையும் வியந்து அவனிடம் செல்லும்படி விடை
யளித்தது. அவனும் சந்தோஷத்துடன் விரூபாக்ஷன் என்ற
ராக்ஷஸன் இருக்குமிடம் விசாரித்துக் கொண்டு அன்நகரின்
கோட்டைவாசலில் வந்தடையுமுன்னமே ராஜதர்மாஎன்று
காரணப்பெயர் வாய்ந்த அந்த நாடீஜங்கன் முன்னமேயே ஒரு
தூதனிடம் சொல்லியனுப்பி கௌதமனைக் கவனித்துக்கொள்
ளும்படிசெய்து, ராஜதர்மத்தை அநுட்டித்தான் அந்த விரூ
பாக்ஷனும் பொதுவான ப்ராம்மண விச்வாஸத்தாலும் ராஜதர்மா
அனுப்பியிருப்பதுபற்றின அதிக கௌரவத்தினாலும் கோட்டை
வாசலுக்குவெளியில் வண்டிவாகனாதிகளையனுப்பி ராஜதர்மா
அனுப்பின கௌமர் என்ற ப்ராம்மணர் நீர்தானா? நீர்தானா?
என்று சிப்பந்திகளைக்கொண்டு விசாரிக்கச்செய்தான், கடைசி
யாக கௌதமன் வரவே அவனைப் பல்லக்கில் வைத்துக்கொண்டு

அரண்மனையில் சேர்த்தார்கள். அவனைக்கண்ணுற்றமாத்திரத்தில் சங்கையுடையவனாகி விரூபாக்ஷன் உமதுகோத்திரம் என்னசாகையென்ன சூத்திறம் என்ன. எந்தவூரில் பிறந்தவர் எந்தவூரில் எந்த கோத்திரத்துப் பெண்ணை மணந்தவர் என்று வினவினான். அதற்கு தன்கோத்திரம்தவிற மற்றொன்றுக்கும் மறுமொழி இல்லாததுகண்டு இவன்பிராமணப்ருவனாயிருப்பான் போலிருக்கிறது இருந்தாலும் சினேகிதனுடைய வார்த்தையை கௌரவிக்கவேண்டும் நாளையதினம் கார்த்திகை பௌர்ணமாஸி நமது கிரகத்தில் ஸஹஸ்ரபோஜனம் நடக்கப்போகிறது அதில் ஒருவராக இவரையும் புசிப்பித்து தெக்ஷிணை அளிப்போம் என்று நினைத்து அப்படியே ஏற்பாடு செய்துவிட்டான் ஸஹஸ்ரபோஜனம் நடந்தது. நானா தேசங்களிலிருந்து மறையோர்கள் வந்திருந்தார்கள் ஒவ்வொருவர்க்கும் தங்கக்குடம் வெண்பட்டு ஜோடி நூறு வராகன் தெக்ஷிணைகடுக்கன் மோதிரம்முதலிய ஆபரணங்கள் இவைகளை அளித்து அனுப்பினான் நமது கௌதமனும் பணத்தைத் தூக்கிக்கொண்டு அங்கிருந்து விடியஜாமத்திற்குள் புறப்பட்டு தனியே நெடுவழி நடந்து வழிதெரியாமல் தடுமாறி மறுநாள் மாலை ஐந்து மணிக்கு நாடீஜங்கன் இருக்கும் ஆலமரத்தடிக்குவந்து சேர்ந்தான் உடனே அந்தக் கொக்கானது போய்வந்ததில் நடந்த சமாசாரங்களை மிகுந்த அன்புடன் வினவியது. இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டே இருவரும கண்ணயர்ந்தார்கள் நடு நிசியில் எழுந்தான் நமது கௌதமன், மனதிற்குள்ளே சிந்திக்கலானான் நாளையதினம் இந்ததனமுடிப்பைத்தூக்கிக் கொண்டு நெடுதூரம் நடந்து மிலேச்சதேசம்சென்று மனையாளிடம் சேர்க்கவேணுமே வழியில் பசியாற உண்ண இடமில்லை கட்டமுது கட்டிக்கொண்டு சென்றால் நலமாயிருக்கும். நாடீஜங்கனோ தூங்குகிறது நாழிகையோஆகிறது நல்லதிருக்கட்டும். இது தேவலோகத்துப்பக்ஷி நன்றாகப்பருத்து கொழுத்திருக்கிறது. अन्नानुरूपां तनुरूपऋद्धिः என்றுஸ்வாதுதாமான தேவலோகப்பண்டங்களை தின்றிருப்பதால் இதன் மாமிசம் வெகு ருசிகாமாக இருப்பதுடன் இரண்டுமூன்று வேளைக்கும் போதுமானது ஆதலால் இதைக்கொன்று இதன் புலாலை எடுத்துப்போவோமானால் கவலையில்லாமல் ஊர்போய்ச்சேரலாம். என்றிவ்வாறு ஆலோசித்து மனந்துணிந்து தூங்குகின்ற அந்த நாடீஜங்கனைக் கொன்று அதின் சிறகையும் கால்களையும் கிழித்துக்கீழே எறிந்துவிட்டு உடலைமாத்திரம் ஓர் பைக்குள்

போட்டுக்கொண்டு தோளில்தொங்கவிட்டு, தலையில் பணமுடிப்புடன் சரேலென்று புறப்பட்டு தன்தேசத்தை நோக்கிச்செல்லுவானாயினன்.

இஃதிவ்வாறிருக்க வழக்கமாகப் பிரதிதினம்காலையில் வரக்கூடிய நண்பனான ராஜதர்மன் இன்று வாராதகாரணம் தெரியவில்லையேயென்று கௌதமனைக்கண்டபொழுதே முதல் கவலைகொண்டிருந்த விரூபாக்ஷன் தன் தூதர்களான இரண்டு ராக்ஷஸர்களை அனுப்பி ஆலமரத்தடியில் போய்ப்பார்த்துவிட்டு அங்கில்லாவிடில் கௌதமனை கைப்பிடியாக கொண்டுவாருங்களெனக் கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே மரத்தடிக்குச்சென்று அங்கு கொக்கு இல்லாததையும் சிறகும் கால்களும் சிதையுண்டு கிடைப்பதைக்கண்டு கௌதமன் பேரில் சந்தேகங்கொண்டு விரைவில் நாலுபுறமும் துரத்திச்சென்று கஹனமான ஆரணியத்தில் தனிமையே சென்றுகொண்டிருக்கும் கௌதமனைப்பிடித்து அவன் பையை சோதனையிட்டு கொக்கினுடலைக் கண்டெடுத்துகொண்டு கோபாவேசத்தினால் அவனையும் பழிக்குப்பழி வாங்கிவிட்டார்கள். பிறகு விஷயங்களை அறிந்த விரூபாக்ஷன்

पयः पानं भुजङ्गानां केवलं विषवर्धनं ।

என்று பாம்பிற்கு பால்வார்த்தாலும் அது விஷத்தையே கக்குமன்றோ, 'தௌது தீயில் விழுந்தால் செத்திடாதெடுத்தபேரை மீளவே கொடுக்கினாலேயே மெய்யுறக் கொட்டுமன்றோ" ஆதலால் துஷ்டருக்குபகாரமபுரிதலும் தீதே नापात्रे शास्त्रमुत्सृजेत् என்று பெரியோர் கூறவில்லையா, கழுதைக்குபதேசம் காதிலேஹீநருக்குபதேசமிடறே. 'வானரமழைதனினனைய தூக்கணாள் தானொருநெறிசொல தாண்டிப்பியத்திடும், ஞானமும் கல்வியும் நவின்றநூல்களும் ஹீனருக்குரைத்திடிவிடராதாகுமே, என்ற நீதிகளையறிந்தும் ராஜதர்மன்தெய்வவசத்தால் துஷ்டனுக்கு இடங்கொடுத்து உயிர்துறந்தானே, என்று பலவாறு புலம்பி அவனுக்கு சாஸ்திரப்படி ஸம்ஸ்காரம் செய்யுமாறு. கட்டளையிட்டான். உடனே அதின் அவயவங்களையெல்லாம் ஒன்று சேர்த்துச்சிதையில் வைத்துக்கொண்டிருக்கும் தருவாயில் ஆகாயத்தில் காமதேனு சென்றுகொண்டிருந்தது.

(தொடரும்)